**+1 வணிகவியல் முழுஆண்டுத் தேர்வு மார்ச் - 26**

**சரியான விடை**

1.அ. இலாபம் ஈட்டுதல்
2.அ. போக்குவரத்து
3.அ. தனியாள் வணிகம்
4.அ. ராபர்ட் ஓவென்
5.இ. குளிர்பதன
6.ஈ. விமானம்
7.அ. மின்னணு வணிகம்
8.இ. நியாயமான விலை
9.ஈ. மேற்கண்ட அனைத்தும்
10.ஆ. உரிமையாளர்கள்
11.இ. 25
12.ஆ. அந்நியச் செலவாணி மாற்று பத்திரம்
13.இ. மறு ஏற்றுமதி வியாபாரம்
14.அ. மொத்த வியாபாரம்
15.ஆ. கப்பல் இரசீது
16.அ. வாஷிங்டன் DC
17.ஈ. ஒப்பந்தம்
18.ஈ. இவை அனைத்தும்
19.ஆ. நேரடி வரி
20.இ. சரக்கு மற்றும் சேவை வரி

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. பண்டமாற்று முறை** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறையேப் பண்டமாற்று முறை எனலாம்.

**22. கர்த்தா:** இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்தி, மேலாண்மை செய்யும் குடும்ப தலைமை உறுப்பினர்க்கு "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று பெயர்.

**23. கைபேசி வங்கியியல் பற்றிக் கூறுக.**
பெரும்பாலான வணிக வங்கிகள், சுட்டிகை கைபேசிகளில் பதிவிறக்கம் செய்யக் கூடிய கணினி நிரல்களை அதாவது செயலிகள் என்று அழைக்கப்படும் நிரல்களை வடிவமைத்துள்ளன. சுட்டிகை கைபேசிகளில் இருக்கும் இந்தப் பயன்பாட்டைக் கொண்டு ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கை எங்கிருந்தும் இயக்க முடியும். இந்தச் சேவையினைக் கைபேசி வங்கியியல் என்று அழைக்கின்றோம்.

**24. தொழில் நெறிமுறைகள் பல்வேறு முக்கியக் கூறுகள்: 1.** உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு:-
2.நன்னெறி நடத்ததை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல்:-
3. நன்னெறி விதிமுறைகளை கடைபிடிப்பதைக் கண்காணித்தல்:-
4. அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துதல்:-
5. நன்னெறி பலனை அளித்தல்:-

**25. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.** மண்பாண்டங்கள் செய்தல், பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்தல், போக்குவரத்து, பழுதுபார்க்கும் கடைகள், குடிசைத் தொழில்கள், சிறிய கைத் தொழில்கள், கைத்தறி மற்றும் கைவினை தொழில்கள்.

**26. வியாபாரத்தின் பொருள்:** இலாபம் ஈட்டும் நோக்கில், பொருட்களையும் சேவைகளையும் வாங்கி விற்பது மற்றும் பரிமாற்றம் செய்வது வியாபாரம் ஆகும்.

**27. சரக்காணை** என்பது சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் ஆகும். இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப் பிறகு சரக்கை வாங்குவதற்கான சரக்கு ஆணையை தானோ அல்லது தன் முகவர் மூலமாகவோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார். சரக்காணை இரண்டு நகல்களில் தயாரிக்கப்பட்டு ஒரு நகலை ஏற்றுமதியாளருக்கு அனுப்பி விட்டு, மற்றொன்றை இறக்குமதியாளர் தன்னிடம் வைத்துக் கொள்கிறார்.

**28. ஒப்பந்தம்** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டு சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையாகும்.

**29. வருமானவரி:** ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி வருமானவரி எனப்படும். இது ஒரு நேர்முக வரி ஆகும். இவ்வரியில் வரிச்சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலாது.

**30. தனி உரிமையின் தீமைகள்:** தனிஉரிமம் கட்டணம், நிலையான உரிமைத் தொகை செலுத்துதல், தனிஉரிமம் அளித்தவரின் மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்துதல், சுதந்திரமின்மை, குறைந்த அளவு தயாரிப்பு பொருட்களையே கையாள முடியும்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. மனித செயல்பாடுகள்** மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.

**32. வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே, அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது.

**33. குளிர்சாதன பண்டகக் காப்பு** பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு

செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டக சாலைகளில் சேமிக்கப்படுகின்றன.
பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி போன்ற விரைவில் அழுகக் கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன.
சரியான நேரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள், ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

**34. மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்களுக்கு ஏற்படும் நன்மைகள்**

1 உலகத்தின் மூலை முடுக்குகளில் கிடைக்கும் பொருள்களைப் பற்றி வாங்குபவர்கள் மின்னணு வணிகத்தில் அறிய முடிகிறது.

2. பொருளை எப்போது வேண்டுமானாலும் வாங்கும் வாய்ப்பை மின்னணு வணிகம் வழங்குகிறது. மின்னணு வணிகத்திற்கு நேரம் காலம் ஏதும் பொருந்துவதில்லை.

3. பொருள்களை இயல்பாக கடைகளில் சென்று வாங்குவதைக் காட்டிலும் மின்னணு வர்த்தக முறையில் வாங்கும் பொருளின் விலை குறைவாக கிடைப்பதாக கூறப்படுகிறது. காரணம் மின்னணு வணிகர்கள் மின்னணு மூலமாக வாங்கும் பொருள்களுக்கு ஏராளமான விலை சலுகைகளை வழங்குகின்றனர். இடைநிலையர்கள் இல்லாமல் நேரடியாக பொருள்களை விற்பனை செய்ய முடிவதால் பொருளின் விலையையும் குறைக்க இம்முறை சாத்தியமாகிறது.

4. மின்னணு மூலமாக புத்தகம் வாங்குதல், மென் பொருட்கள் வாங்குதல் என்பது கண் இமைக்கும் நேரத்தில் சாத்தியம். அதாவது உடனடியாக புத்தகம், மென் பொருள் மற்றும் பயன்பாட்டு மென் பொருள் இவைகளை பதிவிறக்கம் (Down- load) செய்ய முடியும்.

5 வாடிக்கையாளர்கள் மின்னணு மூலம் நடத்தப்படும் ஏலத்தில் எளிதாக பங்கு பெற முடிகிறது. மின்னணு ஏலத்தில் வெளிப்படைத் தன்மை அதிகம்.

6 தனி நபர்கள் தாங்கள் உபயோகித்த பொருட்களைக் கூட மின்னணு முறையில் வேறு ஒருவருக்கு எளிதாக விற்பனை செய்ய மின்னணு வணிகமுறை தளம் அமைத்து தருகிறது.

7. பொருளை மின்னணு வர்த்தகத்தில் வாங்குபவர்கள் தங்களுக்குச் சாதகமான முறையில் பேரம் செய்து நல்ல விலையில் பொருளைப் பெற்றிட மின்னணு வர்த்தகம் உதவுகிறது.

**35. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருளுக்கான இலக்கணம் தருக.**

**பீட்டர் எ.்.ப் டிரக்கர்** அவர்களின் கூற்றுப்படி "சமுதாய பொது நலன் மேம்பாடு கருதி, உரிய நபர், சமுதாய நம்பிக்கைக்குரிய அடிப்படை மேன்மை, சமுதாய ஒற்றுமை உறுதித் தன்மை மற்றும் நிலைத்தன்மை போன்றவற்றில் பங்களிப்பை ஏற்படுத்துவது ஆகும்.

**36.கால நிதிகளுக்கான மூலங்களைப் பட்டியலிடுக.**

**அ. நீண்ட கால நிதி மூலங்கள்:-**

1. பங்குகள் நேர்மைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள்

2. கடன் பத்திரங்கள்

3. இருத்திவைக்கப்பட்ட ஆதாயம்.

4. பொது வைப்பு

5. வணிக வங்கிகளில் இருந்து நீண்ட காலக் கடன் பெறுதல்.

6. நிதி நிறுவனக் கடன்கள்.

ஆ. **குறுகிய கால நிதி மூலங்கள்:-** கடன்களும் முன் பணங்களும், வங்கி மேல்வரைப்பற்று, மாற்றுச்சீட்டை வட்டம் செய்தல், வியாபாரக் கடன், அடகுக் கடன், பந்தக கடன், அடமானம் கடன், பிணையக் கடன், தூயக் கடன், வணிகத்தாள், வாடகை கொள்முதல் நிதி, கடன் வசூல் முகமை.

**37. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகள்:**
சிறப்பங்காடிகள் பெரும்பாலும் நகரின் மையமாக அங்காடிப் பகுதிகளில் அமைந்திருக்கும்.
பொருள்கள்யாவும் விலை, தரம் மற்றும் ரகம் வாரியாக, அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.
வாடிக்கையாளர்கள் தேவையான பொருள்களை, தானே எடுத்து வந்து காசாளரிடம் உரிய தொகையினை செலுத்தி விட்டு, வீட்டுக்கு எடுத்துச் செல்வர்.
இங்கு ரொக்க விற்பனை மட்டுமே உண்டு. கடன் விற்பனை கிடையாது.
துறைவாரிப் பண்டக சாலை போன்று அமைந்திருப்பதால், ஓரே கூரையான கீழ் அனைத்து வகைப் பொருள்களையும், வாடிக்கையாளர்கள் வாங்க முடிகிறது.
இதை அமைக்க, அதிக முதலீடு தேவைப்படுகிறது

**38. உலக வர்த்தக அமைப்பின் நன்மைகள்**

1. சர்வதேச சமாதானத்தை ஊக்குவிப்பதோடு, பன்னாட்டு வர்த்தகம் நடத்துவதற்கு ஒரு உகந்த சூழலை உருவாக்குகிறது.

2. இது உறுப்பு நாடுகளிடையே ஏற்படும் வர்த்தக ரீதியான பிரச்சனைகளை தீர்த்து வைக்கிறது.

3. இது தடையற்ற வர்த்தகத்தின் மூலம் வருமானத்தை அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிறது.

4. உலக வணிக அமைப்பு உறுப்பு நாடுகளுக்கிடையே கட்டுப்பாடுகள் மற்றும் கட்டண தடைகளை நீக்கியுள்ளது. இது உறுப்பு நாடுகளுக்கிடையே சுதந்திரமான வர்த்தகம் நடை பெறுவதற்கு உதவுகிறது. உறுப்பு நாடுகளின் செலுத்தல் சம நிலையில் ஏற்படும் நிலையை சரி செய்ய இறக்குமதியில் சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

5. இது வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவையான மூலதனத்தை வழங்குவதன் மூலம், வர்த்தக தொடர்புடைய விடயங்களில் அவர்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது.

6. உலக வணிக அமைப்பு மண்டல மற்றும் சர்வதேச மாநாட்டை ஒழுங்குபடுத்துகிறது. இவ்வாறு வளரும் நாடுகளில் உலக வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள், உலகளாவிய ரீதியில் கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை உறுப்பு நாடுகள் அறிந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

7. உறுப்பினர் நாடுகளிடையே கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை மேம்படுத்துவதன்மூலம் உலக மக்கள் பல்வேறு விதமான பொருட்கள் வாங்கி பயன்படுத்த வகை செய்கிறது.

8. உலக வர்த்தக அமைப்பு வர்த்தகத் தடைகளை குறைத்துள்ளது இதன் மூலம் உலகம் முழுவதும் வர்த்தகம் பெருகி தேசிய வருமானம் மற்றும் மக்களின் வருமானம் ஆகியவை அதிகரிக்க உதவுகிறது

**39. ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்: i) வாக்குறுதி அளித்தவரால் (பிரிவு 40)** ஒப்பந்தம் வாக்குறுதி அளித்தவராலோ அல்லது அவருடைய சட்டரீதியான பிரதிநிதியாலோ அல்லது அவரால் பணியமர்த்தப்பட்ட தகுதியுடைய ஏதேனும் வேறு நபராலோ நிறைவேற்றப்பட வேண்டும். தனிப்பட்ட ஆற்றல் சார்ந்த ஒப்பந்தங்களில் அவை வாக்குறுதி அளித்தவராலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

**ii) முகவர் (பிரிவு 40)** வாக்குறுதி அளித்தவரின் தனிப்பட்ட ஆற்றலை நம்பி ஒப்பந்தம் உருவாக்கபடவில்லையெனில் அத்தகைய ஒப்பந்தத்தில் வாக்குறுதி அளித்தவரின் முகவரும் நிறைவேற்றலாம்.

**iii) சட்டரீதியான பிரதிநிதி (பிரிவு 37)** தனிப்பட்ட ஆற்றல் சார்ந்த ஒப்பந்தங்களில் வாக்குறுதி அளித்தவர் ஒப்பந்தத்தைத் தனிப்பட்ட முறையில் நிறைவேற்ற வேண்டும். அந்நிலையில் வாக்குறுதி அளித்தவர் இறந்துவிட்டால் அந்த ஒப்பந்தம் முடிவடைகிறது. ஆயினும் தனிப்பட்ட ஆற்றலை நம்பியில்லாத ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, வாக்குறுதி அளித்தவரின் சட்டரீதியான வாரிசுதாரர் அவரது மறைவிற்கு பிறகு நிறைவேற்றலாம்.

**iv) மூன்றாவது நபர் (பிரிவு 41)** வாக்குறுதி பெறுபவர் மூன்றாம் தரப்பினர் ஒப்பந்தம் நிறைவேற்றுவதை ஒப்புக்கொண்டால், வாக்குறுதி அளித்தவரே அதனை நிறைவேற்ற வேண்டும் என வற்புறுத்த இயலாது.

**40. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள்**

இந்தியாவில் சமமான வரி வீதத்தினை தோற்றுவிப்பதே சரக்கு மற்றும் சேவை வரியின் முதன்மை நோக்கம் ஆகும்.

வரியின் விழுத்தொடராக விளைவினை தவிர்க்க, சரக்கு மற்றும் சேவை வரி முன் செலுத்திய வரியினை சரிக்கட்டிக் கொள்ள அனுமதிக்கிறது.

ஏற்றுமதியினை ஊக்குவிக்க, வசூலிக்கப்பட்ட உள்ளீட்டு வரி திருப்பி வழங்கப்படுகிறது. எனவே ஏற்றுமதியின் மீது வரி இல்லை.

வரி அடிப்படையை அதிகரித்தே வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை மற்றும் வரி வருவாய் அதிகரிக்கப்படுகிறது.

வரி அறிக்கை வழிமுறைகளை எளிமையாக்க, பொதுவான படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. வணிக வரி அலுவலகங்களுக்கு செல்லும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

இணையதள வரி செலுத்தல்கள் மற்றும் படிவங்களைச் சமர்ப்பிக்க சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு வலையமைப்பு என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக.**

**ஆள்சார் தடை:-** பொருள்கள் தேவைப்படும் நபர்களையும், நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

**இடத்தடை:-** பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

**காலத்தடை:-** ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது. **இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத்தடை:-**பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள் ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன. **நட்ட இடர்பாட்டுத்தடை:-** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன. **அறிவுசார் தடை:-** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இது அறிவுசார் தடை எனப்படும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன. **பண்டப்பரிமாற்றத் தடை:-** பணம் பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவைகளையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

**நிதித்தடை:-** உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.

**41.ஆ. பெருநிறுவன ஆளுகையின் நன்மைகள்**
பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களை சீரமைத்தல். முதலீட்டாளர்களின் (அ) பங்குதாரர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதுல். மற்றும் அதன் மூலம் முதலீட்டை மற்றும் பங்குகளை வாங்கச் செய்தல்.
அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டை சரியான முறையில் கையாளுகிறது. வள ஆதாரங்கள் சிறந்த முறையில் பங்கு ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது. தொழில் நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது.

| 42 அ. அடிப்படை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| **பொருள்** | இது ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். | நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். |
| **வியாபாரத்தில் பங்கு பெறுவோர்** | ஒரே நாட்டில் உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். | ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். |
| **வியாபார முறை** | ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. | பல நாடுகளுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. |
| **பயன்படுத்தும் நாணய மதிப்பு** | உள்ளூர் நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | அயல்நாட்டு நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |
| **போக்குவரத்து** | இதில், சாலை மற்றும் இரயில் போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | கப்பல் மற்றும் விமான போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது. |
| **இடர்** | இடரின் அளவு குறைவு | தொலை தூரம், சமூக பொருளாதார அரசியல் நிலைகள் மற்றும் அயல் நாட்டு நாணய மதிப்பில் ஏற்படும் மாற்றம் போன்ற காரணங்களால் இடர் அதிகமாகிறது. |
| **சந்தையின் அளவு** | ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டது | ஒரு நாட்டின் எல்லைகளை கடந்து செல்கிறது. |

**42.ஆ. பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகள்:**
**குறைந்த பட்ச கூலி:-** குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில் பொருட்களையும், சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க விலையில் நன்மைகளைப் பெறுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகைச் செய்யப்படுகிறது.

**தரமான பொருட்கள்:-** வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாரளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும், சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

**வாழ்க்கைத் தரம் உயர்கின்றது:-** பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

**பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்:-** இவை, தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும், பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

**நாட்டின் செலவாணி செலுத்துநிலை வளர்ச்சி:-** இவை, ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால், நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.

**43.அ. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக.**

**உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி:-** சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது, வங்கியியல் மேற்பார்வை பேஸல் குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது. பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

**இந்திய வங்கிகளின் கட்டமைப்பின் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்:-** நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான வழிகாட்டுதல்களை, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. எந்த வணிக வங்கிகளையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

**பணவியல் உச்ச நிலை அதிகாரி:-** விலைவாசி நிலைத் தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி தீர்மானிக்கிறது. இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கிக் கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

**பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்:-** பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்கான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தக சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர்குழு, குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி, நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

**புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது:-** இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில், வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

**43.ஆ. சட்டப்படி செல்லக் கூடிய ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமையாத கூறுகள் யாவை?**

**முனைவும் ஏற்பும்:-** ஒரு ஒப்பந்தத்திற்கு இரண்டு நபர்கள் தேவை. அவர்களில் ஒரு நபர் முனைவும் மற்றொருவர் ஏற்பும் செய்கின்றனர்.

**சட்ட உறவு முறை:-** ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உள்நோக்கம், தங்களுக்கிடையே ஓர் சட்ட உறவு முறை உருவாக்குவதற்காக இருக்க வேண்டும்.

**சட்ட பூர்வமான மறுபயன்:-** மறுபயன் என்பது, எதையேனும் திரும்பப் பெறுதல் ஆகும். மறுபயன் இல்லாத உடன்படிக்கை செல்லாத உடன்படிக்கையாகும்.

**சட்டபூர்வமான நோக்கம்:-** உடன்படிக்கை நோக்கம் சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். இதன் நோக்கம், சட்டத்துக்கு புறம்பானதாகவோ அல்லது ஒழுக்கக் கேடானதாகவோ அல்லது பொது நலனுக்கு எதிராகவோ இருக்கக் கூடாது.

**தன்னிச்சையான இசைவு:-** உடன்படிக்கை நபர்களின் தன்னிச்சையான இசைவால் ஏற்பட்டிருந்தல் வேண்டும். ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களிடம் மனமொத்த இசைவு தர வேண்டும். அவர்கள் ஒரு விஷயத்தை ஒரே நேரத்தில் ஒரே நோக்குடன் உடன்பட வேண்டும். அதாவது, ஒருமித்த கருத்து இருக்க வேண்டும்.

**ஒப்பந்த தகுதி** ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதி உடைய நபர்களால், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம் ஆகிறது.

**சட்டத்தால் செயல்படுத்தும் திறன்:-** சட்டத்தால் செயல்படுத்தும் திறன் கொண்டதாக இருத்தல் வேண்டும். சட்டத்தால் சில உடன்படிக்கை சட்ட விரோதமானது அல்லது செல்லாது என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**44.அ. மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**

**இணைப்புச் சங்கிலி:** மொத்த வியாபாரி உற்பத்தியாளரையும் சில்லறை வியாபாரியையும் இணைக்கிறார். ஆனால் சில்லறை வியாபாரி மொத்தவியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கிறார். வழங்கல் வழியில் மொத்த வியாபாரி முதல் இணைப்புச் சங்கிலி ஆவார். சில்லறை வியாபாரி இறுதி இணைப்புச் சங்கிலி ஆவார்.

**செயல்பாட்டு அளவு:** மொத்த வியாபாரம் பெருமளவில் நடப்பதால் தொழிலுக்கு மிகப் பெரும் அளவு முதல் தேவைப்படுகிறது. ஆனால் சில்லறை வியாபாரம் சிறு அளவில் மட்டுமே நடப்பதால் சிறிய அளவு முதல் தொகையே போதுமானது.

**கிடைக்கும் பொருள்கள்:** மொத்த வியாபாரி ஒரே வகையான பொருட்களை மட்டுமே வாங்கி விற்கிறார். ஆனால் சில்லறை வியாபாரி பலதரப்பட்ட நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பலவிதமான பொருட்களை வாங்கி விற்பார்.

**செயல்பாடு:** மொத்த வியாபாரி சில்லறை வியாபாரிகளுக்குக் கடன் விற்பனை செய்கிறார். ஆனால் சில்லறை வியாபாரிகள் நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை செய்கிறார்.

**விற்பனையின் நோக்கம்:** மொத்தவியாபாரி மறுவிற்பனைக்காகப் பொருட்களை விற்பனை செய்கிறார். ஆனால் சில்லறை வியாபாரி நுகர்வுக்காகப்பொருட்களைவிற்பனைசெய்கிறார்.

**அளிப்பின் மூலம்:** மொத்த வியாபாரிகள் பொருட்களை முகவர் அல்லது மொத்த வியாபாரியிடம் அதிக எண்ணிக்கையில் பொருள்களை வாங்குகின்றனர். ஆனால் சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகள் அல்லது அவரது முகவரிடம் சிறு எண்ணிக்கையில் பொருட்களை வாங்குகின்றனர்.

**இடவமைப்பு:** ஒரு மொத்த வியாபாரி தனது வியாபாரத்தைப் பெரிய வணிக நகரங்களில் நிறுவி அதைச் சுற்றியுள்ள மற்றப் பகுதிகளுக்கும் பரவச் செய்கிறார். ஆனால் ஒரு சில்லறை வியாபாரி சிறு கிராமம் முதல் பெரு நகரங்கள் வரை தனது வணிக நிலையத்தை நிறுவி அக்குறிப்பிட்ட பகுதியில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். பொருள்களையும் சேவைகளையும் விநியோகிப்பதை வழங்கல் வழிகள் எளிதாக்குகிறது.பொருள்களும் சேவைகளும் உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்குத் தடங்களின்றி சென்றடைய வழங்கல் வழிகள் மிக முக்கியப் பங்காற்றுகிறது.

**44.ஆ. ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்கள்:**

**கடன் ஏடுகளை பராமரித்தல்:-** தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக் கடன்களை பராமரிக்கும் முழு பொறுப்பினை தனி உரிமை பேராள் ஏற்றுக் கொள்கிறார்.

**கடன் எல்லைகளை நிர்வகித்தல்:-** வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையை தனி உரிமைப் பேராளன் ஏற்றுக்கொள்கிறார். இதனால் வணிகத் தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக் கவனம் செலுத்துகிறார்.

**ரொக்க முன்பணம்:-** ஏறத்தாழ கடன் விற்பனையில் ஏறக்குறைய 80% முன் கூட்டியே வணிகர் பெற்று விடுகிறார்.

**வசூல் சேவை:-** வாடிக்கையாளர்களுக்கு நினைவு கூறச் செய்தல், பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும் இந்த சேவையில் அடங்கும்.

**தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்:-** தனி உரிமை பேராள்,

கடந்த காலங்களில் வாடிக்கையாளரிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபாரச் செய்திகளை உடனுக்குடன் வழங்குகிறாா

**45.அ. போக்குவரத்தின் பல்வேறு வகைகள்:**

**நிலப்போக்குவரத்து:-**

**பொதிவிலங்குகள்:-** மலை, காடு மற்றும் பாலைவனம் போன்ற பின்தங்கிய பகுதிகளிலும் சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும். குதிரை, கோவேறு கழுதை, கழுதை, ஒட்டகம், மற்றும் யானை போன்றவ விலங்குகளை பொதிவிலங்குகள் என்று அழைக்கப்படுகிறது.

**மாட்டுவண்டிகள்:-** இந்தியாவில் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளே ஆகும். இது அருகிலுள்ள சந்தைகள் மற்றும் ரயில் நிலையங்களுடன் கிராமங்களை இணைக்கிறது.

**சாலைப் போக்குவரத்து:-** சாலை போக்குவரத்து என்பது, குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு மிகவும் ஏற்றதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் உள்ளது. மேலும் மற்ற போக்குவரத்து வகைகளின் திறனை அதிகரிக்கவும் அதற்கு துணை புரியவும் உதவுகிறது.

**இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்:-** நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே, மக்கள் சாலைகள் அமைத்தும், சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர்.

**டிராம் வண்டிகள்:-** 19 ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்களுக்கு பொருத்தமான ஒரு போக்குவரத்து முறையாக இது தோன்றியது. டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும், பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது.

**தொடர்வண்டி போக்குவரத்து:-** ஜேம்ஸ் வாட் அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது. தொடர் வண்டிகள் போக்குவரத்து, உலகெங்கிலும் மிகவும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட போக்குவரத்தாக உள்ளது. நீண்ட தூரத்திற்கு மேல் கனரக சரக்குகளை சுமந்து செல்வதற்கு, தொடர் வண்டிகள் மலிவான மற்றும் விரைவான வழி வகைகளாக இருக்கின்றன.

**போக்குவரத்து சமீபத்திய வளர்ச்சிகள்:-**

1.மெட்ரோ ரயில் 2. மோனா இரயில் 3. புல்லட் இரயில் 4. குழாய் போக்குவரத்து 5. கன்வேயர் போக்குவரத்து 6. கயிறு வழி போக்குவரத்து 7. உயர் சுழற்சி வளையப் போக்குவரத்து

நீர்ப்போக்குவரத்து 3. விமானப் போக்குவரத்து ஆகும்.

| 45 ஆ. அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| **பொருள்** | நேர்முக வரி என்பது, நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது. | மறைமுக வரி என்பது சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு விற்பனையாளரால் அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது. |
| **இயல்பு** | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| **வரி நிலைப்பாடு மற்றும் வரி தாக்கம்** | மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்படுகிறது. | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு ஆனால் வியாபாரியால் செலுத்தப்படுகிறது. |
| **வகைகள்** | சொத்துவரி, வருமானவரி, நிறும வரி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் | மத்திய விற்பனை வரிகள், மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி உள்நாட்டு வரி, சுங்க வரி. |
| **ஏய்ப்பு** | வரி வாய்ப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. | வரி ஏய்ப்பு காண வாய்ப்பு குறைவு |
| **பண வீக்கம்** | இது பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது. | இது பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது. |
| **மாற்றுதல்** | மாற்ற முடியாது | மாற்ற முடியும். |
| **உதாரணங்கள்** | சொத்து வரி, வருமானவரி | சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி |

**46.அ. சுய உதவி குழுக்களின் நோக்கங்கள்**

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது.

முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்.

பெண்களிடம் திறமையை உருவாக்கி, ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபட செய்வது.
பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களின் மனங்களில், சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல்.
பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்.
கடன் வட்டம் அல்லது சுழல் நிதி மற்றும் சுழற்சி கடன் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
உறுப்பினர்களின் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்துதல்.
எதிர்காலப் பொருளாதார அதிகார மேலாண்மையை திறமையை வளர்த்தல் மற்றும் கடன் தொடர்புகளுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
உறுப்பினர்கள் தங்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்கு அவர்களாகவே தீர்வு காண்பதற்கான விழிப்புணர்வு பயிற்சியினை அளித்தல்.
குழு உறுப்பினர்களின் பொதுவான விருப்பங்களை அறிந்து, குழு நடவடிக்கைகளை முடிவு செய்தல், திறமையான மற்றும் சிக்கனமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் அனைத்துச் சமூகப் பொருளாதாரத் தடைகளையும் வெற்றியுடன் எதிர்கொள்ள அவர்களை தயார்படுத்துதல்.

**46.ஆ. சிறுகுறிப்பு வரைக:-**

**பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்:-** ஒரு மூலப் பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஆராய்ச்சித் தொழிற்சாலை ஆகும்.
எகா:- எண்ணெய் சுத்திகரிக்கும் தொழிற்சாலையில், கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை பிரித்தல்.

**மரபுசார் உற்பத்தித் தொழில்:-** நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் வளர்க்கப்படுகின்ற தொழிற்சாலையே மரபுசார் தொழிற்சாலை எனப்படும். எகா:- கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு

**கட்டுமானத் தொழில்கள்:-** கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் மற்றும் அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையே கட்டுமானத் தொழிற்சாலை எனப்படுகிறது.

**47.அ. வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி.**

வெவ்வேறு நாடுகளைச் சார்ந்த வாங்குபவர் மற்றும் விற்பவர்களிடையே நடைபெறும் வியாபாரம் பன்னாட்டு வியாபாரம் (வெளிநாட்டு வியாபாரம்) ஆகும்.
வெளிநாட்டு வியாபாரம் மூன்று வகைப்படும். அவை:- இறக்குமதி வியாபாரம், ஏற்றுமதி வியாபாரம், மறுஏற்றுமதி வியாபாரம்.

**இறக்குமதி வியாபாரம்:-** உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும்.
எகா:- இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறிக்கலாம்.

**ஏற்றுமதி வியாபாரம்:-** உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை, வெளிநாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.
எகா:- இந்தியா இரும்பு எ.்.கு போன்றவற்றை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தலைக் கூறலாம்.

**மறு ஏற்றுமதி வியாபாரம்:-** ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**47.ஆ. துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள்**

**எளிமையான அமைப்பு:-** இதனை அமைப்பது எளிது, இவ்வமைப்புகளை நிர்வாக முடிவு எடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.

**பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு:-** இதனை, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும். அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

**இரகசியம் காத்தல்:-** பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவைகள் அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும். அப்போது தான் அத்துறைகளில் பணியாளர்கள் தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.

**பொது மக்களுக்கு வரிச்சுமை குறைவு:-** இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால் பொது மக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்.

**சமூக மாற்றத்திற்கான கருவி:-** அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை அரசுத் துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும். ஆகவே, அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த துறை நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.